# கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம். கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், பொ.ப.து., மருத்துவப்பணிகள், சேப்பாக்கம், சென்னை - 5 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை - பொறி. **R.**பாண்டியராஜன், எம்.இ., எம்.ஐ.இ.,
கண்காணிப்புப் பொறியாளர் பொ.ப.து.,

செயல்முறை ஆணை எண். நி2/ 445 / 2019 நாள். 09.12.2019.

பொருள் - நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திரு.ச.ஆராவமுதன் பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணிநியமனம் வழங்கியது - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை -
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3. அவர்களின் கடித எண். 1150/ பி.எஸ்.டி - எச் 2/2019, நாள். 18.02.2019.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் (நீ.ஆ.து.,) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),சென்னை மண்டலம் பொ.ப.து., சேப்பாக்கம். சென்னை-5 செயல்முறை ஆணை எண். எஸ்.3(3) / 25366 / 2019, நாள் 25.02.2019.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். நி2/ 445 / 2019 நாள். 07.03.2019.

*****

பார்வையில் ஒன்றில் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் போட்டிக்கான தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, பார்வை இரண்டில் காணும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (நீ.ஆ.து.,) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),சென்னை மண்டலம் பொ.ப.து., சேப்பாக்கம். சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணையின் மூலம் இவ்வட்ட அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.C.ஆரவாமுதன் இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்கண்டவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1 | திரு.ச.ஆராவமுதன்<br>இளநிலை உதவியாளர்<br>பிறந்த நாள்.17.06.1976 | 08.03.2019 மு.ப | 08.03.2019 மு.ப |

2. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணியாளர் விதி பொது விதி 23(எ)(1)-ன்படி திரு.ச.ஆராவமுதன், இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் அப்பதவியில் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை மூன்றாண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும்.

3. இந்த தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்.

கண்காணிப்புப் பொறியாளர் சார்பில் பொ.ப.து.,
கட்டட (க & ப) வட்டம், மருத்துவப்பணிகள்,
சேப்பாக்கம், சென்னை - 5.

பெறுநர்

திரு.ச.ஆராவமுதன், இளநிலை உதவியாளர்,
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் பொ.ப.து.,
கட்டட(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்,
மருத்துவப் பணிகள், சேப்பாக்கம், சென்னை-5.